பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
27 12 2025 SATURDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மாநில தலைமைச்செயலாளர்களின் தேசிய மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.
- தமிழகத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம்கள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.
- திருவண்ணாமலை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 95 கோடி ரூபாய் மதிப்பில் முடிவடைந்த திட்டப் பணிகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.
- திமுக ஆட்சியில் நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.
- இலங்கைக்கு எதிரான மூன்றாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் தொடரை கைப்பற்றியது.

>>>>><<<<<

புதுதில்லியில் நடைபெற்று வரும் மாநில தலைமைச்செயலாளர்களின் தேசிய மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

நேற்று தொடங்கிய இந்த மாநாடு, நாளை வரை நடைபெறவுள்ளது.

மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்தி, நாட்டின் வளர்ச்சிக்கான முன்னுரிமைப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுவதை நோக்கமாக கொண்டு, இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான மனிதவளம் என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த ஆண்டு மாநாடு நடைபெறுகிறது.

ஆரம்பக் கல்வி, பள்ளிக் கல்வி, உயர் கல்வி, திறன் மேம்பாடு, விளையாட்டு மற்றும் இதர பாடத்திட்டங்கள் குறித்தும் இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம்கள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தகுதியுள்ள வாக்காளர்கள் தங்களது விண்ணப்பங்களை இந்த முகாம்களில் வழங்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாத 18 வயது நிரம்பியவர்கள், படிவம் 6-ஐ உறுதிமொழி படிவத்துடன் சமர்ப்பித்து, தங்களது பெயரை சேர்க்க விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

முகவரி மாற்றம், ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளில் திருத்தம் செய்தல், புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டையில் மாற்றம் செய்தல் ஆகிய கோரிக்கைகளுக்கு படிவம்-8 மூலம் விண்ணப்பிக்கலாம் என்றும் திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 95 கோடி ரூபாய் மதிப்பில் முடிவடைந்த திட்டப் பணிகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

திருவண்ணாமலையில் நடைபெறும் விழாவில் 46 புதிய பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

14 ஆயிரத்து 734 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு முதலமைச்சர் வழங்கவுள்ளார்.

>>>>><<<<<

தமிழகம் முழுவதும் 10 லட்சம் மாணவ மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், வரும் 5ஆம் தேதி தொடங்கி வைக்கவுள்ளதாக மாநில அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் நகரும் நியாயவிலைக் கடைகளை தொடங்கி வைத்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தால் ஏராளமான மாணவர்கள் பயனடைவார்கள் என்றும் அவர் கூறினார்.

காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இத்திட்டம் வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தை குடிசை இல்லாத மாநிலமாக மாற்றும் நோக்கில், முதற்கட்டமாக ஒரு லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

திமுக ஆட்சியில் நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், ஜவுளி தொழிலுக்கு புகழ்பெற்ற ஈரோடு மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு போதுமான கூலி கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்.

அவர்களுக்கு சட்டபூர்வ கூலியை உறுதிப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

காளிங்கராயன் கால்வாயில் அதிகப்படியான சாயப்பட்டறை கழிவுகள் கலப்பதால், சுற்றுச் சூழல் மாசு ஏற்பட்டுள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

கேரளாவில் பறவைக்காய்ச்சல் பரவி வரும் நிலையில், அதன் எதிரொலியாக, கோவை மாவட்ட எல்லையில் உள்ள சோதனைச் சாவடிகளில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அம்மாநிலத்திலிருந்து வரும் வாகனங்கள் பரிசோதனை செய்யப்பட்டு, சுகாதார துறையின் சார்பில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் - ஹரிகரன் 48 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

பிரதமரின் மக்கள் மருந்தகத்தால், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஏராளமானோர் பயனடைந்து வருகின்றனர்.

குறைந்த விலையில், தரமான மருந்துகள் கிடைப்பதால், பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு இருப்பதாக கடை உரிமையாளர் திருமதி. கௌரி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - உரிமையாளர் 23 செகண்ட்ஸ்)

மக்கள் மருந்தகத்தில், ரத்த அழுத்தம், சர்க்கரை உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு மருந்துகள் மலிவு விலையில் கிடைப்பதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 25 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

சிரியாவில் மசூதி ஒன்றில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு ஐக்கிய அரபு எமிரேட் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தைவானுக்கு அதிக அளவில் ராணுவ தளவாடங்களை விற்பனை செய்வது என்ற அமெரிக்காவின் முடிவால், கடும் விளைவுகள் ஏற்படும் என்று சீனா கூறியுள்ளது.

>>>>><<<<<

சோமாலியாவிலிருந்து பிரிந்து, தன்னாட்சி கோரி வரும் *Somaliland* பகுதியை ஒரு தனிநாடாக இஸ்ரேல் அங்கீகரித்துள்ளது.

>>>>><<<<<

சத்திஷ்கட் மாநிலத்தில் இதுவரை 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாவோயிஸ்ட்டுகள் சரணடைந்துள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் உள்ள துவக்கப் பள்ளிகள் முதல் மேல்நிலைப் பள்ளிகள் வரை, அனைத்திலும் செய்தித்தாள் வாசிப்பை கட்டாயமாக்கி அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

>>>>><<<<<

தூத்துக்குடியில் மூன்று நாள் சுதேசி திருவிழா நேற்று தொடங்கியது.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திரு. பிரதாப் நேற்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

பொங்கல் பண்டிகைக்கு மண் பாண்டங்களை அரசு கொள்முதல் செய்து, பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்று மண்பாண்ட தொழிலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் சார்பில், தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தில் கள்ளத் துப்பாக்கிகளை விற்பனை செய்த 5 பேரை காவல்துறையினர் நேற்று கைது செய்தனர்.

>>>>><<<<<

மீஞ்சூர் – அத்திப்பட்டு ரயில் நிலையங்களில் பராமரிப்பு பணிகள் நடைபெறவுள்ளதால், அந்த வழித்தடத்தில் நாளை சில மின்சார ரயில்களின் சேவை ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>><<<<<

இலங்கைக்கு எதிரான மூன்றாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 112 ரன் எடுத்தது.

113 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 13 புள்ளி இரண்டு ஓவரில் 115 ரன் எடுத்து, வெற்றிபெற்றது.

Shafali Verma அதிரடியாக ஆடி, 42 பந்துகளில் 79 ரன் குவித்தார்.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரை இந்தியா முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்று கைப்பற்றியுள்ளது.

>>>>><<<<<

மாநில அளவிலான கைப்பந்து போட்டி தருமபுரியில் நேற்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறும் இப்போட்டியை, உயர்நீதிமன்ற நீதிபதி திரு. நிர்மல் குமார் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<